4. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு. ப. பொன்னுரங்கம் : பாயின்ட் ஆப் ஆர்டர், பேரவைத்தலைவர் அவர்களே, நான் கடந்த 4 நாட்களுக்கு முன்பு, இராமநாதபுரம் மாவட்டத்தில் கால்நடைகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பது குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். இந்த ஆடு மாடுகள் வாயில்லாப் பூச்சிகள், அவைகளிடம் ஓட்டில்லை என்பதால் எடுத்துக் கொள்ளப்படவில்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப்பற்றி கேட்க அறைக்கு வாருங்கள்; பேசிக் கொள்ளலாம்.

திரு. கு. ரமணி : நானும் ஈரோடு பிரச்சினையைப் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிகழ்ச்சி நிரல் அச்சிட்டுக் கொடுத்த பிறகு தாங்கள் கொடுத்திருக்கிறீர்கள். நிகழ்ச்சி நிரல் கொடுப்பதற்கு முன்பு கொடுத்திருந்தால், சேர்த்திருக்கலாம். உறுப்பினர்களுக்கு நிகழ்ச்சி நிரல், குறிப்புகள் எல்லாம் முன்கூட்டியே கொடுக்கப்பெற வேண்டும் என்கிறீர்கள். அதற்காக ஒரு இயந்திரம் வாங்கியிருக்கிறோம். சுறுசுறுப்பாக செயலகம் செயல்படுகிறது. வேகமாக அச்சட்டித்துக் கொடுக்கிறோம். நீங்களும் உங்களது அறிவிப்புகளை எல்லாம் முன்கூட்டியே செயலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். நேரம் கழித்து கொடுப்பதன் மூலம் இது போன்ற குறைபாடுகள் வந்துவிடக்கூடாது. எல்லோருக்கும் சம வாய்ப்பு அளிக்கப் பெற்றாக வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, அறிவிப்புக் கொடுப்பதற்கு முன்பு அஜெண்டா அச்சிடப்பெற்று விட்டது என்ற ஒரு டெக்னிகல் பாயின்டைச் சொல்கிறீர்கள். அதைப்பற்றி எனக்குத் தெரியாது. 3 நாட்களுக்கு முன்னதாகவே மானியக் கோரிக்கைக்கான ரிப்போர்ட்டுகள் கொடுக்கப்படும் என்று அறிவிப்பு செய்தீர்கள். அதற்குப் பிறகும் முந்தா நாள் வந்தது, மறுநாள் கொடுத்திருக்கிறீர்கள். இப்படி சில விதிவிலக்கு இருக்கிறது. எனவே இதில் மட்டும் இவ்வளவு ரிஜிடாக இருந்தால் அங்கத்தினர்களுக்கு இன்டரஸ்ட் போய்விடும். எனவே, இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் விடுதிகளுக்குப் போவதற்கு முந்தி 1 மணிக்குள்ளாகவே மானியக் கோரிக்கைகளுக்கான குறிப்புகளைக் கொடுப்பதற்கான

ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதை உறுப்பினர்கள் வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். அதேசமயத்தில் உறுப்பினர்களும் கொஞ்சம் சீக்கிரமாகவே தங்கள் அறிவிப்புகளையும் கொடுத்துவிட்டால் நல்லது. இதில் திரு. ‌மு. ரமணி பெயரும் சேர்த்தாகிவிட்டது.

5. கவன ஈர்ப்புகள்.

அ. (ஈரோடு, வீரம்பாளையம் கிராமத்தில் குடிசைக்குத் தீ வைக்கப்பெற்று ஐந்து பேர்கள் மரணம் அடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, என். எஸ். வி. சித்தன், கே. எம். தங்கமணி கவுண்டர் ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி தீர்மானத்தை மொழிவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஈரோடு அருகில் வீரம்பாளையம் கிராமத்தில் ஒரு வீட்டில் தீ வைக்கப்பட்டு 5 நபர்கள் மரணமடைந்தது'' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. பெரியார் மாவட்டம், அரச்சலூர் காவல் நிலைய எல்லைக்குள்ளிருக்கும் வீரப்பபாளையம் என்ற கிராமத்தில், 2—7—1980 அன்று நள்ளிரவு முத்துசாமி என்பவரது ஓலை வேய்ந்த வீடானது யாரோ சிலரால் வெளிப்புறமாகப் பூட்டப்பட்டு தீ வைக்கப்பட்டது. இதன் காரணமாக அவ்வீட்டிலிருந்த முத்துசாமி கவுண்டர் (வயது 40) அவருடைய மனைவி பாப்பம்மாள் (வயது 30) அவருடைய 8 வயது மகள், 5 வயது மற்றும் ஒரு வயதான இரண்டு மகன்கள் ஆகியோர் இறந்துவிட்டனர்.

பெரியார் மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டு அங்கிருந்தவர்களிடம் மேற்படி நிகழ்ச்சியைப் பற்றி விசாரித்துள்ளார். பாசனத்திற்காக, கீழ்பவானி திட்டக் கால்வாயிலிருந்து தண்ணீரை சென்னியப்பன் என்பவரது, நிலத்தின் வழியாக முத்துசாமியின் நிலத்துக்குக் கொண்டு வருவது பற்றி இறந்தவர்களது குடும்பத்தினருக்கும் சென்னியப்பன் மற்றும் சென்னிமலை கவுண்டர் ஆகியோரது குடும்பத்தினருக்கும் இடையே